UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2009**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*7112633890*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose one from Section 1, one from Section 2 and one other.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.

At the end of the examination, fasten all your work securely together.
All questions in this paper carry equal marks.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதும் தாளிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். அதில் உங்கள் பெயர் , நம்பர், சென்டர் நம்பர் ஆகியவற்றை எழுதவும். கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால் விடைகளை எழுதவும்.

பசை, ஹைலைட்டர்கள், ஸ்டேப்பிள் பின், பிழை திருத்தும் திரவங்கள், பேப்பர் க்ளிப்புகளைப் பயன் படுத்தாதீர்கள்.

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு வேறு வேறு பாடப் பகுதியிலிருந்து எடுத்து விடைகள் எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு விடை தரவும். மற்றொரு கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளை தேர்வு நடக்கும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது.**
புத்தகங்களை தேர்வு நடக்கும் இடத்துக்குள் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.

தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத்தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.
எல்லா கேள்விகளுக்கும் சமமான மதிப்பெண்கள் தரப்படும்.
(ஒவ்வாரு விடைக்கும் 25 மதிப்பெண் வீதம் மூன்று விடைகளுக்கும் 75 மதிப்பெண்)

This document consists of **4** printed pages.

SP (GB/TL) V01286/1
© UCLES 2009

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

www.xtremepapers.net

பகுதி –1

1 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. குறுந்தொகை

நோம், என் நெஞ்சே;நோம், என் நெஞ்சே;
இமை தீய்பன்ன கண்ணீர் தாங்கி,
அமைதற்கு அமைந்த நம் காதலர்
அமைவு இலர் ஆகுதல், நோம், என் நெஞ்சே.
- காமஞ்சேர்குளத்தார்

(i) இந்தப் பாட்டில் தலைவியின் கூற்றை புலவர் எப்படி வருணிக்கிறார்?

(ii) இது நெய்தல் துறையில் எவ்வாறு பொருந்தும்?

ஆ. புறநானூறு

அதியமான் நெடுமான் அஞ்சியின் குண நலனை அவ்வையார் எவ்வாறு போற்றுகிறார்?
இந்தப் பாட்டின் துறையை விளக்கி அது எவ்வாறு பொருந்தும் என்றும் விளக்குக.

2 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. திருக்குறள்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்

(i) ஒழுக்கத்தின் சிறப்பை எப்படியெல்லாம் வள்ளுவர் போற்றிப் பாடுகிறார்?

(ii) 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'-என்ற சொற்களால் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து என்ன?

ஆ. எது ஊக்கம் உடைமை? இது பற்றி நீங்கள் அறிந்துகொண்டது என்ன? வள்ளுவர் கூறும் கருத்துக்களின் அடிப்படையில் விளக்கி எழுதுக.



www.xtremepapers.net

3 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

தேவாரம்- திருஞானசம்பந்தர்

வாளரி தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலை யானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

அ. (i) இந்தப் பாடலில் 'கோளரி உழுவையோடு கொலை யானை கேழல் கொடு நாகமோடு கரடி' என்ற வரிகளின் பொருள் என்ன?

(ii) சிவபெருமானை வழிபடும் அடியார்களுக்கு என்ன நன்மைகள் வரும், என்ன தீமைகள் விலகும் என்று ஒவ்வொரு பாடலிலும் சம்பந்தர் கூறுவது என்ன?

ஆ. நாளும் கோளும் அடியார்களை பாதிக்காது என்று சம்பந்தர் கூறும் கருத்தை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.
ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.

4 இக்காலக் கவிதைகள்

அ. பாரதியார்

ஒரு நண்பனிடம் எதிர்பார்க்கும் எல்லா நல்ல குணங்களும் கண்ணனிடத்தில் உள்ளதா? பாரதியார் பாடலைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

ஆ. பாரதிதாசன்

இயற்கையைப் பாடுவதில் பாரதிதாசன் வல்லவர் என்பதை 'கானல்' என்னும் பாடலைக் கொண்டு விளக்குக.



www.xtremepapers.net

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.
ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.

5 தண்ணீர் தண்ணீர்- கோமல் சுவாமிநாதன் நாடகம்

அ. மழை இல்லாத கிராமத்தில் வாழும் மக்களின் கஷ்டங்களை, ஆசைகளை, நம்பிக்கைகளை கதாபாத்திரங்கள் வாயிலாக விளக்குவதில் ஆசிரியர் வெற்றிபெற்றாரா? எடுத்துக்காட்டுகளுடன் கூறுக.

ஆ. இந்த நாடகத்தில் முக்கிய கதா பாத்திரம் யார் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? அதற்கான காரணங்கள் என்ன?

6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்

அ. நாற்காலியும் நான்கு தலைமுறைகளும்- கதையில் திலகவதியின் பாத்திரப் படைப்பு எவ்வாறு உள்ளது என்பதை விமர்சனம் செய்யவும்.

ஆ. நவீன தமிழ்ச் சிறு கதைத் தொகுப்பில் உங்களுக்குப் பிடித்த ஏதேனும் இரண்டு கதைகளின் பாத்திரப் படைப்பை ஒப்பிடவும்.

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2009


www.xtremepapers.net